இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 06
LWU 3325/4325 – சர்வதேச மனித உரிமைகள் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 18.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

5 வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. கீழே தரப்பட்டுள்ள சட்டவியல்சார் சிந்தனைகளின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மனித உரிமைகள் எண்ணக்கருவை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

   (அ) இயற்கை சட்ட கொள்கை

   (ஆ) புலனறிவாதம்

   (இ) மார்கஸிஸ கொள்கை

2. மனித இனங்களுடைய சமத்துவ, எண்ணக்கருவை உலகத்தில் இருக்கின்ற மதங்கள் எந்தளவு தூரத்திற்கு அங்கீகரித்து ஏற்று கொண்டுள்ளது என்பதை ஆராய்க. உமது ஆராய்வில் நவீன கருத்தோட்டத்தில் சமத்துவத்துக்கான மனித உரிமை எவ்வாறு மதம்சார் கற்பித்தலுடன் ஒப்பிடப்படுகிறது என்பதை பற்றி பகுப்பாய்வு ஒன்றை வழங்குக.

3. ஹெலினியா, என்ற நாடு இந்திய உப கண்டத்தில் இருக்கின்ற ஒரு தீவுக்கூட்டம் ஆகும். ஹெலனியா மேலேத்தைய அதிகாரங்களுடைய காலனித்துவ ஆக்கிரமிப்பின் கீழ் ஏறக்குறைய 500 வருடங்கள் இருந்து வந்ததோடு தான் இழந்து இருந்த சுதந்திரத்தை அண்மையில் மீள பெற்றுக்கொண்டுள்ளது.

   வெளிநாட்டு பிரஜைகளை உள்ளடக்கிய குழு ஒன்று அண்மையில் ஹெலினியாவுக்கு விஜயம் செய்தது. இக் குழு சமூகசேவை நிறுவனமொன்றை பிரதிநிதித்துவ படுத்தி கிராமத்தவர்கள் மற்றும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு குறிப்பிட்ட மத நம்பிக்கையை போதிக்க ஆரம்பித்தது. கிராமத்தவர்களுடைய கருத்துக்களுக்கு அமைய இவ் நம்பிக்கை அவர்களுடைய நூற்றாண்டு பழமை வாய்ந்த மத கொள்கை, ஒழுக்கம் மற்றும் சமூக ஒற்றுமைக்கு எதிராக இருக்கிறது என கூறப்பட்டது. மேலும் இப் புதிய நம்பிக்கையை ஏற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பணக்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பொருட்களால் கவரப்பட்டுள்ளார்கள் எனவும் இந் நம்பிக்கையை எதிர்ப்பவர்கள் ஏளனப்படுத்தப்பட்டு அலட்சியப்படுத்தப் படுகிறார்கள் எனவும் கிராமத்தவர்கள் கூறினார்கள்.

   கிராமத்தவர்களிடம் இருந்து முறைப்பாடுகளை பெற்றுக்கொண்ட ஹெலனியாவின் மதத் தலைவர்களை உள்ளடக்கிய குழு, ஒழுக்கத்திற்கு மாறான மத மாற்றம் தொடர்பான மதம் சார் உரிமைகள் சட்டமூலம் ஒன்றை தயாரித்தது. இச் சட்டமூலத்தை சட்டமாக்குவதற்காக ஹெலனியாவின் சட்டவாக்குனர்களிடம் அவர்கள் கையளிக்க விரும்புகின்றனர். மேலும் இச் சட்ட மூலம் குடியியல், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனத்தின்(ICCPR)ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதெனவும் கூறினர்.

ICCPR உடைய உறுப்புரை 18இன் 3ஆவது பந்தி "...ஒருவருடைய மதத்தை அல்லது நம்பிக்கையை பின்பற்றும் சுதந்திரமானது, பொது மக்கள் பாதுகாப்பு, கட்டளை, சுகாதாரம் அல்லது ஒழுக்கம் அல்லது அடிப்படை உரிமைகள் மற்றும் ஏனையவர்களுடைய உரிமைகள் ஆகியவற்றை பாதுகாப்பதற்கு அவசியமான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைவாக இருக்க வேண்டும்" என பிரகடனப்படுத்துகிறது.

ஹெலனியா அரசியல் அமைப்பு பின்வருமாறு பிரகடனப்படுத்தியுள்ளது. "ஒவ்வொருவருக்கும் சிந்தனை செய்யும் சுதந்திரம், மனசாட்சி மற்றும் மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உண்டு. அத்துடன் தன்னுடைய விருப்ப தெரிவின்படி இன்னுமொரு மதத்தை அல்லது நம்பிக்கையை தழுவிக்கொள்ளவும் உரிமை உண்டு".

மதம்சார் உரிமைகள் தொடர்பான ஹெலனியா பாராளுமன்ற உபகுழு ICCPR உடைய ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நகல் சட்டமூலம் மீது சட்டக்கருத்துக்களை பெற உம்மை நாடுகிறது.

ஆராய்க.

4 "சர்வதேச குற்றவியல் சட்டத்தின் அடிப்படை அல்லது பிரதான குற்றங்கள் சர்வதேச சட்டத்தின் *jus cogens* அல்லது மீற முடியாத நியமங்களுடைய ஒரு பகுதியாக அடிக்கடி குறிப்பிடப்படுகிறது".

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மீதான உரோம நியதிச்சட்டத்தின் துணை கொண்டு மேலே தரப்பட்ட கூற்றை ஆராய்க.

5. "அரசுகள் ஒவ்வொன்றும்

(அ) பால்நிலை அல்லது ஆண்கள் மற்றும் பெண்களுடைய ஒரே மாதிரியான பங்களிப்புகளிலே செல்வாக்கும் செலுத்தும் தாழ்வு மனப்பான்மை அல்லது மேலாதிக்கத்தை தோற்றுவிக்கின்ற கருத்துக்களின் மீது காணப்படுகின்ற தப்பு அபிப்பிராயங்கள் மற்றும் வழக்காற்று மற்றும் ஏனைய அனைத்து நடைமுறைகளையும் இல்லாது ஒழித்து ஆண்கள் மற்றும் பெண்களுடைய நடத்தைகளின் சமூக மற்றும் கலாச்சார வடிவமைப்புகளை மெருகூட்டுவதற்கு பொருத்தமான அனைத்து வழிவகைகளையும் மேற்கொள்ள வேண்டும்". - உறுப்புரை 5 (a) பெண்களுக்கெதிரான அனைத்துவகையான பாரபட்சங்களை இல்லாது ஒழிப்பதற்கான உடன்படிக்கை

உமது கருத்தில் இலங்கை, மேலே கூறப்பட்ட ஏற்பாட்டை போதுமான அளவில் பின்பற்றி உள்ளதா? பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் உமது விடையை விளக்குக.

6. சிறுவர்களை படையில் சேர்த்துக்கொள்ளல் தொடர்பாக இருக்கும் சர்வதேச பொறிமுறைகளை இனங் கண்டு அதனை இலங்கையின் சமகால போக்குடன் தொடர்புறுத்தி பகுப்பாய்வு செய்க.

7. மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் முறைமையின் வரலாறை எழுதுக.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

(அ) சித்திரவதை மற்றும் கொடூர, மனிதாபிமானமற்ற மற்றும் கீழ்த்தரமான நடத்துகைக்கு எதிரான உடன்படிக்கை.

(ஆ) பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாராபட்சங்களையும் இல்லாது ஒழிக்கின்ற உடன்படிக்கைக்கான விருப்புரிமை பிரதி.

(இ) *Gillick v. West Norfork and Wisbech Area Health Authority* (1986) A.C 112

(ஈ) மனித உரிமைகளும் வழக்காற்று சர்வதேச சட்ட நியமங்களும்

(பதிப்புரிமைபெற்றது)